**மதுக்கரை நகராட்சியில் 28.12.2023ம் நாள் நடைபெற்ற அவசர மன்றக்கூட்டத்தின் தீர்மான நகல்கள்.**

**மன்றப் பொருள் எண்.01**

அரசாணை (நிலை) எண்.142 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்.23.11.2023-க்கு இணங்க, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.7145/2023/எம்.ஏ2, நாள்.15.12.2023-ன் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.236/2023/பி1 நாள்.18.12.2023-ல் அறிவுறுத்தியதன்படி, நகராட்சிகளின் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

மேற்காணும் விபரத்திற்கு நகர்ப்புற உள்ளாட்சியினை ஒட்டி அமைந்துள்ள ஊராட்சியின் வருவாய் மற்றும் மக்கள் தொகை வளர்ந்து வரும் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு அருகிலுள்ள நகராட்சிகளுடன் இணைப்பது குறித்தான செயற்குறிப்பினை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையுடன் நகர்மன்ற தீர்மானம், ஊராட்சி மன்ற தீர்மானம், ஊராட்சிகளின் பட்டியல் ஊராட்சிகளின் மக்கள்தொகை மூன்றாண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த வரைபடம் ஆகிய விபரங்களுடன் உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு 31.12.2023-க்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டியுள்ளது.

மேற்காணும் விபரத்திற்கு ஊராட்சிகளை இந்நகராட்சியுடன் இணைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், நகராட்சிக்கு அருகிலுள்ள சீரபாளையம் ஊராட்சி, பாலத்துறை ஊராட்சி, திருமலையம்பாளையம் பேரூராட்சி மற்றும் எட்டிமடை பேரூராட்சி ஆகிய நான்கு உள்ளாட்சிகளை மதுக்கரை நகராட்சியுடன் இணைப்பது தொடர்பாக சம்மந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்தின் மூலம் இசைவு தெரிவிக்க அவர்கள் முன்வராததால் தற்போது மதுக்கரை நகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2782/2023/எஃப்1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.315**

நகராட்சிக்கு அருகிலுள்ள ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை நகராட்சியுடன் இணைத்து கொள்ள எவரும் முன்வராததால் தற்போது நகர் எல்லை விரிவாக்கம் தேவையில்லையென தீர்மானிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்

இடம் : மதுக்கரை — நகர் மன்றத்தலைவர்

நாள் : 28.12.2023 — மதுக்கரை நகராட்சி

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்

மதுக்கரை நகராட்சி